## உயிர்த் தியாகம் வேண்டாம்!

# இந்தித் திணிப்பை தமிழ்ப்பற்றால் வீழ்த்துவோம்!

### மே 17 இயக்க சிவா திலீபன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, மார்ச் 21 -**

**மே 17 இயக்கத்தைச் சேர்ந்த சிவா திலீபன் இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தின்போது உயிர் நீத்தார். அவர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட செய்தியில், இந்தித் திணிப்பை மதிநுட்பத்தாலும், மன உறுதியாலும், தமிழ்ப் பற்றாலும்தான் வீழ்த்த வேண்டும் என போராடுபவர்களை கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.**

இது தொடர்பாக கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு :-

“இனி ஒரு உயிரும் போக வேண்டாம்!

இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தின் போது உணர்ச்சிவயப்பட்டு இரயில் முன் பாய்ந்த சகோதரர் சிவா திலீபன் அவர்கள் தீவிர சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தது மனதைக் கனக்கச் செய்கிறது.

மொழிப்போரில் நாம் ஈந்த உயிர்ப்பலிகள் போதும்! இனி ஒரு உயிரும் போகக் கூடாது! தொழில்நுட்பத்தின் உதவியால் பல புதுமையான, அமைதியான, பெரும் வீச்சு கொண்ட போராட்ட வழிமுறைகளைப் பெற்றிருக்கிறோம்!

இந்தித் திணிப்பை நம் மதிநுட்பத்தாலும் மனவுறுதியாலும் தமிழ்ப்பற்றாலும்தான் வீழ்த்த வேண்டும்! இப்போரில் நம் உயிர் வீழக்கூடாது. நம்மைப் போன்ற தமிழ் மறவர்கள் வீழ்ந்து போனால் தாய்த்தமிழ் எங்ஙனம் வாழும் எனச் சிந்தியுங்கள். நம் உணர்ச்சிகளைக் காட்ட வேறு வழிகள் உள்ளன, உயிர்த்தியாகம் வேண்டாம் என மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

சகோதரர் சிவா திலீபன் அவர்களை இழந்து வாடும் தோழர் திருமுருகன் காந்தி உள்ளிட்ட மே 17 இயக்கத்தினருக்கும் தமிழுணர்வு கொண்ட அவரது இரண்டு மகள்கள் மற்றும் துணைவியார் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் உரித்தாக்குகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கில்

# குற்றவாளி கைது! உச்சபட்ச தண்டனையை உறுதி செய்வோம்!

### கனிமொழி கருணாநிதி எம்.பி. உறுதி!

சென்னை, மார்ச் 21–

விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கு குறித்து, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கு குறித்து, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளது வருமாறு:-

விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கில் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு, குற்ற வாளியைக் கைது செய்துள்ளது தமிழ்நாடு காவல்துறை. அச்சமூக விரோதி உச்சபட்ச தண்டனைப் பெறுவதை உறுதி செய்வதோடு, பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திற்கு உரிய நீதி கிடைக்கவும், இத்துயரிலிருந்து மீண்டு வரவும் துணையாக இருப்போம்.

குற்றவாளிகளைத் தண்டிப்பதை சட்டம் உறுதி செய்யும். ஆனால், குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் பாதுகாப்பான சூழலை ஒரு சமூகமாக நாம் அனைவரும் சேர்ந்தே உறுதிப் படுத்த முடியும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## பூம்புகார் தொகுதியில்

# கழக அரசின் சாதனைகளை பிரச்சாரம் செய்து வெற்றிக்குப் பாடுபடுவோம்!

### செம்பனார்கோயில் வடக்கு – தெற்கு – மத்திய ஒன்றிய வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

*மயிலாடுதுறை, மார்ச் 21 -*

*மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் தொகுதிக்கு உட்பட்ட செம்பனார்கோயில் வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றியங்கள் மற்றும் சீர்காழி கிழக்கு ஒன்றியம் ஆகியவற்றின் வாக்குச் சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ. 2) மற்றும் கழக செயல்வீரர்கள் கூட்டம் செம்பனார்கோயிலில் பி.கே.சி. திருமண மண்டபத்தில் நடைபெற்றது.*

*கூட்டத்திற்கு செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எம்.அன்பழகன் தலைமை தாங்கினார். மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், செம்பனார்கோயில் மத்திய ஒன்றிய கழக செயலாளர் அமிர்த.விஜயகுமார், சீர்காழி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பஞ்சு. குமார், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே.முத்துராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய செயலாளர் எம். அப்துல் மாலிக் வரவேற்றார். கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.*

*கூட்டத்தில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் எம்.எம்.சித்திக், ஏ.சி. என். விஜயபாலன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஹர்ஷத், ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்சென்ட்., தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரிகுமரவேல், முன்னாள் ஒன்றிய குழு துணைத் தலைவர் பாஸ்கர், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் வி.எஸ்.என்.செந்தில், காளி தேசப்பன், சம்சுதீன், வைத்தியநாதன், வி.எஸ் பிரபாகர்,*

*மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் மற்றும் டாக்டர் வீரபாண்டியன்,செம்பனார்கோயில் வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றிய கழக நிர்வாகிகள் சுப்பையயன், நெடுமாறன், சத்தியராஜ், அமுதா அன்பழகன், சரவணன், பிரபாகர், கே.எஸ்.கருணாநிதி, ஈச்சங்குடி இளங்கோவன், கண்ணங்குடி கணேசன், ரங்கநாதன் சங்கர், சாந்தி வேல்முருகன், கருணாநிதி, சிவகுமார், தெட்சிணாமூர்த்தி, சாரா சேகர், தங்கவேல், பாண்டு மற்றும்*

*சீர்காழி கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் தரங்கம்பாடி பேரூர் நிர்வாகிகள் ஏ.சடகோபன், எஸ்.கந்தசாமி. மதியழகன். சரவணன், ராஜா மற்றும் கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்டபிரதிநிதி தென்னரசன் நன்றி கூறினார்.*

*கூட்டத்தில் கழகத் தலைவர் தளபதியின் தாரக மந்திரமான வெல்வோம் 200 +, படைப்போம் வரலாறு! என்பதற்கு இணங்க கழகத் தலைவர், திராவிட மாடல் அரசர், முதல்வர், தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் செய்த மகத்தான சாதனைகளை ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று எடுத்துக்கூறி குறிப்பாக பெண்களுக்கு மகளிர் விடியல் பயணம், மகளிர் உரிமை தொகை மாதம் ரூ.1,000 ஆகியவற்றை எடுத்து கூறியும், அடுத்து கழக ஆட்சி அமைந்த உடன் மகளிர் உரிமை தொகை ரூ.2.000 ஆக உயர்த்தப்படும் என்று கூறி பிரச்சாரம் செய்து அனைவரையும் தி.மு.க. வாக்காளர்களாக மாற்றி, கழகத் தலைவர் தளபதி அறிவிக்கும் வேட்பாளரை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிப் பெற கழக நிர்வாகிகள், கழகத்தினர் வெற்றிக்கு உழைத்து கழகத் தலைவர் கரத்தை உயர்த்திடுவது என்றும், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 7 வது முறையாகவும், கழகத் தலைவர் தளபதி தலைமையில் 2 முறையாக முதல்வராக கழக ஆட்சி அமைந்திட உழைத்திடுவது என்றும்,*

*தலைமை கழகத்தால் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2 ) மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (பி.எல்..சி) ஆகியோரிடம் வாக்காளர் பற்றிய முழு விபரம் குறித்து கணக்கெடுப்பு எடுக்க வழங்கப்பட்ட நோட்டை உடன் முழுமையாக பூர்த்தி செய்து அந்த பணியை முடித்து ஒன்றிய, பேரூர்ச் செயலாளர்களிடம் வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2 ) மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (பி.எல்.சி)யினர் வழங்கிடவேண்டும் என்றும், ஒன்றிய பேரூர் பகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பூத் வாரியாக ஸ்டாலின் மகளிர் படையினர் வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறியும், 5 ஆண்டு கால திராவிட மாடல் அரசால் அந்த குடும்பத்தினர் பெற்ற நலத்திட்ட உதவிகளை எடுத்துக்கூறி பிரச்சாரம் மேற்கொண்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணியைச் சேர்ந்த ஸ்டாலின் மகளிர் படையினருக்கும், மகளிர் படையினருக்கு உரிய ஏற்பாடுகளை செய்த ஒன்றிய, பேரூர் செயலாளர்களுக்கும், உறுதுணையாக நின்ற கிளை, வார்டு கழக நிர்வாகிகளுக்கும் கழகத்தினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

---

**தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026**

### தி.மு.க. வேட்பாளர்கள் நேர்காணல்

### தேதி மாற்றம்

**21–3–2026 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மாவட்டங்கள் 23–3–2026 அன்று நடைபெறும்**

**தலைமைக் கழக அறிவிப்பு**

**தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்கு போட்டியிட விரும்பி விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் ஏற்கனவே 21–3–2026 சனிக்கிழமை அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த மாவட்டங்கள் ரமலான் பண்டிகையை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டு, 23–3–2026 (திங்கள்கிழமை) அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| மார்ச் 23 திங்கள் | காலை 9.00 மணி | திருச்சி வடக்கு, திருச்சி மத்திய,திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, பெரம்பலூர், அரியலூர் |
| மார்ச் 23 திங்கள் | மாலை 4.00 மணி | புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை நாகப்பட்டினம், திருவாரூர் |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 19-3-2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

**கழக சட்டத்துறை வார் ரூம் அலுவலகத்துடன் இணைந்து பணியாற்றிட**

## புதுச்சேரி மாநிலத்தின் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு வார்ரூம்!

DMK IT WING

### கழக தகவல் தொழில் நுட்ப அணிச் செயலாளர் – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

**புதுச்சேரி மாநில தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கவனத்திற்கு**, புதுச்சேரியில் கடந்த **3 முறை** நாம் நடத்திய சந்திப்புகளில், அணியின் சார்பில் மேற்கொள்ள வேண்டிய **கழகப் பணிகள் குறித்து விரிவாக ஆலோசனைகள்** மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், **புதுச்சேரி மாநிலத்தின் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு வார் ரூம்** (Firewall) **அமைத்தல்** மிகவும் அவசியமானதாகும், இந்த வார் ரூம்கள், **அறிவாலயத்தில் அமைந்துள்ள கழக சட்டத்துறை வார் ரூம் அலுவலகத்துடன் இணைந்து பணியாற்றி**, தமிழ்நாட்டின் **திராவிட மாடல் அரசின் மகத்தான சாதனைத் திட்டங்கள்** நமது கூட்டணி மூலமாக புதுச்சேரி மக்களுக்கும் கிடைத்திடும் வகையில் வெற்றிக்கானப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை
நாள் : 19.3.2026

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

---

**தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026**

# தி.மு.க. வேட்பாளர்கள் நேர்காணல்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

**தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்குப் போட்டியிட விரும்பி தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பம் செலுத்தியவர்களை கழகத் தலைவர் அவர்கள் 17–03–2026 முதல் 22–03–2026ஆம் தேதி வரை, பின்வரும் மாவட்ட வாரியாக சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேர்காணல் வாயிலாகச் சந்தித்து தொகுதி நிலவரம் வெற்றி வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்து அறிந்திட இருக்கிறார்கள்.**

**குறிப்பிட்டுள்ள தேதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர் மட்டும் வரவேண்டும். மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர, பகுதிக் கழகச் செயலாளர்கள் வரவேண்டிய அவசியமில்லை. வேட்பாளர்கள் தங்களுக்கான ஆதரவாளர்களையோ, பரிந்துரை யாளர்களையோ அழைத்து வரக்கூடாது என்றும், அவர்களையும் ‘அவர்களுக்காக விருப்ப மனு’ செலுத்தியோரையும் நேர்காணலுக்கு கண்டிப்பாக அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.**

### மாவட்ட வாரியாக நேர்காணல் நடைபெறும் நாள் விவரம்

| நாள் – கிழமை | நேரம் | மாவட்டம் |
|---|---|---|
| மார்ச் 22 ஞாயிறு | காலை 9.00 மணி | கடலூர் கிழக்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் தெற்கு, காஞ்சிபுரம் தெற்கு. |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை கிழக்கு |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---



# சாதனைப் பயணம் தொடரும்; ஓரணியில், ஒற்றுமையாக !